கனடா காரை கலாச்சார மன்றம்
பண்ணிசை - தமிழ் மொழித்திறன் போட்டிகள் - 2014

## அதிமேற் பிரிவு (தரம் 9,10,11) வாசிப்பு

### போதைப் பொருள் பாவனை

சமகால மானுடச் சமூகம் எதிர் நோக்கும் பிரச்சனைகளுள் போதைப் பொருட் பாவனையானது ஒரு தீவிர பிரச்சனையாக இனங்காணப்பட்டுள்ளது. போதைப் பொருட் பாவனை ஓர் தனியாள் சம்பந்தப்பட்ட விவகாரமாக ஆரம்பித்து நாளடைவில் சமூகத்திற்குரிய பிரச்சனையாகப் பரிமாணம் பெற்று விடுகிறது. போதைப் பொருள்கள் நாளுக்கு நாள் கண்டு பிடிக்கப்பட்டுக் கொண்டே வருகின்றன. இவற்றிற்கு உதாரணமாக கெரோயின், மார்வீன், கொடீன், மெதடோன், கோகேயின், அபின், மது, கஞ்சா போன்றவற்றை குறிப்பிடலாம்.

போதைவஸ்துப் பாவனையால் ஏராளமான தீமைகள் ஏற்பட்ட வண்ணம் இருக்கின்றன. உதாரணமாக மூளை செயற்பட மறுக்கிறது. கல்லாயிருந்த உடல் புல்லாகிறது. மானம் இழிவடைகின்றது போன்றன.

போதைப் பொருட்களை மனிதர் பல வழிகளில் பயன்படுத்துகின்றனர். புகையுடன் சேர்ந்து புகை பிடிப்பதன் மூலமாகவும், நரம்பில் ஊசியால் குத்தியும், தசைக்குள் ஊசியால் குத்தியும், மதுபானத்துடன் கலந்தும், உணவுடன் கலந்தும் பயன்படுத்துகின்றனர். இப்போதைப் பொருட் பாவனையால் உயர் குருதி அமுத்தம், சுவாசப்பை அழற்சி, இப்பை அழற்சி, நுரையீரல் புற்றுநோய், காசநோய் போன்ற பல நோய்கள் இடம்பெறுகின்றன.

இப்போதைப் பொருட்களைத் தடுக்கும் முயற்சிகளைப் பார்ப்போமேயானால் முதலில் “மக்களை விழிப்புணர்வடையச் செய்வதே” முதற் காரணமாக விளங்குகின்றது. மக்களை விழிப்படையச் செய்யாவிடின் எந்த சக்தியாலும் போதைப் பொருட் பாவனையை அழித்துவிட முடியாது. போதைப் பொருள் விற்பனையால் கிடைக்கும் வருமானத்தை விட அதனால் ஏற்படும் கேடுகள் மிகவும் பாரதூரமானது என்பதை சமூகத்திற்கு உணர்த்த வேண்டும்.

“கையறியாமை புடைத்தே பொருள் கொடுத்து
மெய்யறியாமை கொளல்”

என்ற வள்ளுவரின் வாக்கிற்கிணங்க உலகில் வாழும் ஒவ்வொரு மனிதனும் உணர்ந்து போதை வஸ்துப் பாவனைக்கு எதிராகப் போராடி வாழ்வில் நற்பிரஜையாக உருவெடுப்போம்.